# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.3/2024

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்ராஜ் வா.சா.–1 | | |
| த/பெ. | ஆண்டிநாயக்கர் | | |
| கிராமம் | புல்லாநாயக்கன்பட்டி | தொழில் | விவசாயம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 65 |

---

முதல் விசாரணை 22–04–2026.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 21.10.2010 ம் தேதிய சீனியம்மாளின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 18.01.2021 ம் தேதிய பெருமாள் நாயக்கர் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 27.09.2022 ல் இறந்துபோன வீரநாகம்மாளின் இறப்பு சான்றிதழ் இணையதள நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை மேலும் குறியீடு செய்யவேண்டி முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.04.22 14:26:39 +0530